**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>29.07.2026</u>**

SC. No.37/2011

பக்கம் – 3

PW1 – சுதர்சன் லைட்

**<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த சம்பவத்தின்போது நான் எங்கு பதவியில் இருந்தேன் என்றால் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணி செய்தேன்.தற்போது நான் பணி ஓய்வு பெற்றுள்ளேன். 07.08.2002ல் ஆர்பாக்கம் கூட்டு சாலையில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2002ல் மது விலக்கு அமல் பிாரிவு அலுவலகம் பொதுமக்கள் வசித்து வரும் இடத்தில்தான் அமைந்திருந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ள இடம் என்று சொன்னால் சரிதான்.08.08.2002ம் தேதி எதிரி தசரதன் என் முன்னிலையில் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் தவறு. எனது உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் எந்த வழக்கு பற்றிய விவரமும் தெரியாமல் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் மட்டும் போட்டுள்ளேன் என்றால் தவறு. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.